# தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர்

## தொலைநிலைக்கல்வித் தேர்வுகள்

### இளங்கல்வியியல் (B.Ed.) - இணையவழித் தேர்வு வழிகாட்டு நெறிமுறைகள்

தமிழ்ப் பல்கலைக்கழகத் தொலைநிலைக்கல்வி இளங்கல்வியியல் திசம்பர் 2021 தேர்வுகள் அறிவிக்கப்பட்டுள்ள கால அட்டவணையின்படி 18.04.2022 அன்று தொடங்கி நடைபெறவுள்ளன.

1. இளங்கல்வியியல் எழுத்துத் தேர்வுகள் அனைத்தும் 18.04.2022 அன்று முதல் 23.04.2022 வரை இணையவழி நடத்தப்பெறும்.
2. இரண்டாமாண்டு மாணவர்களுக்கான செய்முறைத் தேர்வுகள் 24.04.2022 அன்று தஞ்சாவூர் மையத்தில் மட்டும் நடைபெறும்.
3. திசம்பர் 2021 தேர்வுக்கு உரிய நாளுக்குள் கட்டணம் செலுத்தி விண்ணப்பம் அனுப்பியுள்ள மாணவர்கள் மட்டும் தேர்வு எழுத அனுமதிக்கப்படுவர். விண்ணப்பிக்காமல் தேர்வு எழுதுவோரின் விடைத்தாள்கள் மதிப்பீடு செய்ய ஏற்றுக் கொள்ளப்பட மாட்டாது.
4. தேர்வுகளுக்கான வினாத்தாள்கள் தேர்வு நாளன்று முற்பகல் 9 மணிக்கும், பிற்பகல் 1 மணிக்கும் பல்கலைக்கழக இணையதளத்தில் வெளியிடப்படும். தேர்வு நேரம் முற்பகல் 10 மணி முதல் 1 மணி வரை, பிற்பகல் 2 மணி முதல் 5 மணி வரை.
5. தேர்வு எழுதுவோர் விடைத்தாள்களை வருடியாக்கம் (Scan) செய்து முதலாமாண்டு மாணவர்கள் பிற்பகல் 2.30 மணிக்குள் dec2021bed.1year@gmail.com என்ற மின்னஞ்சல் முகவரிக்கும்,

   இரண்டாமாண்டு தேர்வு எழுதுவோர் மாலை 6.30க்குள் dec2021bed.2year@gmail.com என்ற மின்னஞ்சல் முகவரிக்கும் அனுப்பிவிட வேண்டும்.
6. தேர்வு இறுதி நாளன்று தாங்கள் எழுதிய அனைத்து விடைத்தாள்களையும் ஒரே உறையில் வைத்து விரைவுத் தபால் / கூரியர் தபால் மூலம் தொலைநிலைக்கல்வித் தேர்வுப் பிரிவுக்கு அனுப்பிவிட வேண்டும்.
7. அனுப்புநர் முகவரியில் தங்களின் பெயர், முகவரி, பதிவெண் மற்றும் பாடப்பிரிவு ஆகியவற்றை எழுதி **கூடுதல் தேர்வுக் கட்டுப்பாட்டு அலுவலர் (பொ), தொலைநிலைக்கல்வித் தேர்வுப் பிரிவு, தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர் – 10** என்ற முகவரிக்கு அனுப்ப வேண்டும்.